| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **123/2022** |
| **DATE** | : | **05.08.2026** |
| **பெயர்** | : | **அருள்முருகன்** |
| **தந்தை பெயர்** | : | **வரதகுட்டி** |

**<u>2ம் பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்து ஆதியில் சண்முக ஆச்சாரி என்பவருக்கு சொந்தமானது என்றால் வேல்முருகன் ஆச்சாரியின் சொத்து. வேல்முருகன் ஆச்சாரி சண்முக ஆச்சாரியின் மகன் என்ற ஓதாவில் அவருக்கு கிடைக்க்பெற்ற சொத்து என்று நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அவ்வாறு எனில் வழக்கு சொத்து ஆதியில் சண்முக ஆச்சாரிக்கு தான் சொந்தமானது என்றால் சரிதான். சண்முக ஆச்சாரிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. சண்முக ஆச்சாரிக்கு இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளேன், அது சம்மந்தமான உத்தரவு ஏதவாது பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சண்முக ஆச்சாரியின் மகன் வேல்முருக ஆச்சாரி என்பதை காட்டுவதற்காக வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சண்முக ஆச்சாரி எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது.

2. சண்முக ஆச்சாரிக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். முதல் மனைவி மூலம் அவருக்கு இரண்டு மகள்கள் உண்டு அதை பற்றி எனக்கு தெரியாது. முதல் மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்ற விவரம் எனக்கு தெரியாது. முதல் மனைவி காலமானதற்கு பின்பு அவர் இரண்டாவது மனைவி தனபாக்கியம் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். தனபாக்கியத்திற்கு சண்முக ஆச்சாரியுடன் திருமணம் நடக்கும் போது அவருக்கு ஏற்கனவே செந்தாமரை என்ற மகள் இருந்தார் என்றால் சரிதான். சண்முக ஆச்சாரி 1949ல் தாவா சொத்து குறித்து தனபாக்கியம் அம்மாளுக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் முன்னிலைக்கு தனபாக்கியம்

அம்மாளுக்கு தாவா சொத்து வந்துவிட்டது என்று சொன்னால் அவ்வாறு கிடையாது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

3. 1949ல் சண்முக ஆச்சாரி தனபாக்கியம் அம்மாளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் தனக்கு ஆண் வாரிசுகள் இல்லை என்பதாலும் அவர்களுக்கு ஒரு சொத்தை கொடுக்க வேண்டும் என்பதாகவும் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக குறிப்புகள் அந்த ஆவணத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சண்முக ஆச்சாரிக்கு முதல் மனைவி மூலமாக பிறந்த இரண்டு பெண் பிள்ளைகள் மட்டும் தான் வாரிசுகள், வேறு எந்த ஆண் வாரிசுகளும் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

4. வேல் முருகன் ஆச்சாரி என்பவர் சண்முக ஆச்சாரியின் மகன் கிடையாது, ஆகவே வேல்முருகன் ஆச்சாரிக்கு தாவா சொத்தில் உரிமை கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வேல்முருகன் ஆச்சாரி தனிகாசலத்திற்கு விற்றதாக சொல்லும் ஆவணம் போலியான ஆவணம், வேல்முருக ஆச்சாரிக்கு தாவா சொத்தை எழுதி கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வேல் முருகன் ஆச்சாரி பெயரில் பட்டா இருந்தது. அந்த பட்டாவை நான் பார்த்ததில்லை.

5. 27.03.2006 ல் நாங்கள் எழுதி கொண்ட பாகப்பிரிவினை பத்திரமும் தாவா சொத்து குறித்து தவறாக உருவாக்கப்பட்டது, ஆகவே இரண்டாம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து குறித்து செந்தாமரை மற்றும் அவரது மகன் 1ம் பிரதிவாதி 21.02.2007 அன்று சக்கரபானிக்கு ஒரு கிரைய ஆவணம் எழுதி கொடுத்தார்கள், அதன் பிறகு சக்கரபாணி இரண்டாம் பிரதிவாதிக்கு 27.08.2008 அன்று ஒரு கிரைய ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

6. மேற்படி இரண்டு கிரைய ஆவணங்களும் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் தான் கேட்டுள்ளேன், கிரைய ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 2007, 2008

கிரைய ஆவணங்கள் பற்றி நாங்கள் பத்திரத்தை ரத்து செய்ய சென்ற போது தான் தெரிந்து கொண்டேன்.

7. நான் காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறேன். எனக்கு நெல்வேலி கிராமத்தில் தாவா சொத்து தவிர்த்து வேறு சொத்துக்கள் இருந்தது. அந்த சொத்துக்களை நான் 1990ல் விற்றுவிட்டேன் என்று நினைக்கிறேன். தாவா சொத்தின் ஜக்குபந்திகள் தெரியாது. தாவா சொத்தின் நான்கு பக்கங்களிலும் 2ம் பிரதிவாதியின் நிலங்கள் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் பயிர் வைத்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா சொத்தை 2008ம் ஆண்டில் இருந்து 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார், நான் தாவா சொத்தில் எப்போதும் சுவாதினத்தில் இருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல, நான் தான் பயிர் வைத்து வருகிறேன். 2008ற்கு முன்பு 2ம் பிரதிவாதிக்கு விற்ற நபர்கள் தான் தொடர்ச்சியாக பயிர் வைத்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் என்ன பயிர் வைத்துள்ளேன் என்றால் தாவா சொத்தை நான் சீதாராமன் என்பவருக்கு பயிர் வைப்பதற்காக குத்தகைக்கு விட்டுள்ளேன். சீதாராமன் நெல்வேலி கிராமத்தை சேர்ந்தவர்.

9. எழுத்து பூர்வமான குத்தகை ஒப்பந்தம் எதுவும் கிடையாது. 2,3 நெல் மூட்டைகள் குத்தகையின் பொருட்டு அவர் கொடுப்பார். மேற்படி விவரங்களை நான் எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சீதாராமனுக்கு குத்தகை விட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10. 2007, 2008 கிரைய ஆவணங்கள் தெரிந்திருந்தும் விளம்புகை பரிகாரம் கேட்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் தனபாக்கியம் அம்மாளுக்கு சொந்தமானது, அவரது இறப்பிற்கு பிறகு அவரது மகள் செந்தாமரையும் அவரது மகனும் சேர்ந்து

சக்கரபாணி என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

11. 2ம் பிரதிவாதிக்கு நான் 04.12.2020 அன்று ஒரு கிரைய ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். நில தரகர்கள் மூலம் தான் அந்த ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். நில தரகர்கள் வேறு ஒரு இடத்தை காண்பித்து தான் அந்த கிரைய ஆவணத்தை தாவா சொத்திற்கு எழுதினார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி கிரையத்திற்கு எவ்வளவு கிரைய மறுபயன் வாங்கினேன் என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும்.

12. வா.சா.ஆ–3 ஆவணத்தில் ரூ.3,07,530/– கிரைய தொகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நான் இந்த தாவா சொத்தை ஏற்கனவே வாங்கிவிட்டேன் ஆகவே மேற்சொன்ன கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோரி என்னை அழைத்தாரா என்றால் வேறு பிரச்சனை இருப்பதாக கூறி ரத்து செய்ய சொல்லி என்னை அழைத்தார். அவர் கேட்டுக் கொண்டாவாறு நாங்கள் கிரைய ஆவணத்தை ரத்து செய்து கொடுத்துவிட்டோம் அந்த ஆவணம் வா.சா.ஆ.4 என்று சொன்னால் சரிதான். கிரைய தொகையையும் அப்போது நாங்கள் செலவினங்கள் போக திருப்பி கொடுத்துவிட்டோம். கிரையரத்து பத்திரம் எனது முழு சம்மதத்தின் பேரில் தான் எழுதப்பட்டது என்றால் மன உளைச்சலின் பேரில் தான் ஆனால் சம்மததத்துடன் எழுதி கொடுத்தோம்.

13. மேற்படி கிரைய ஆவணத்தை முழு சம்மதத்துடன் எங்களுக்கு உரிமை இல்லை என்று தெரிந்ததால் தான் எழுதி கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ–4 கிரைய ரத்து பத்திரம் எழுதி கொடுக்கும் போது 2ம் பிரதிவாதி தாவா சொத்து அவருக்கு தான் சொந்தமானது என்று எங்களிடம் தெரிவித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் உரிமை கோருகிறார் என்ற விவரம் எனக்கு தற்போது வரை தெரியாது.

14. நான் அனைத்து விவரங்களும் தெரிந்து கொண்டும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து 2ம் பிரதிவாதியின் அனுபவித்தில் தான் இருந்து வருகிறது, விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கேட்டதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN

Principal District Miunsif,
Kancheepuram.